DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : CC.No. 180/2022 | Deposition of Witness for : PW4 |
| Name : ஜென்சி | Father/Husband Name : இசக்கிமுத்து |
| Age : 32 | Village : நாசரேத் |
| Taluk : ஏரல் | Calling : இல்லத்தரசி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 18 August 2025

Accused absent. Petition U/s. 317 Cr.P.C filed and allowed.

**<u>முதல் விசாரணை :–</u>**

1. நான் தற்போது நாசரேத்தில் குடியிருந்து வருகிறேன். 03.11.2021 ம் தேதி என் அம்மா அ.சா.1 செல்வி என்பவர் தீபாவளி பண்டிகையை கொண்டாடுவதற்காக பாளையங்கோட்டையிலிருந்து என்னுடைய ஊரான நாசரேத்திற்கு வந்திருந்தார். என்னுடைய கணவர் இசக்கிமுத்து பந்தல் ரேடியா செட் வைத்து தொழில் செய்து வருகிறார். தீபாவளி பண்டிகை என்பதால் என் வீடு இருக்கும் மாணிக்கவாசகபுரம் தெருவில் எனது கணவர் டியூப் லைட், சீரியல் லைட்டுகள், ஸ்பீக்கர் பாக்ஸ் போன்றவைகளை வைத்திருந்தார்.

2. பின்பு 05.11.2021 அன்று மாலை சுமார் 5.30 லிருந்து 6.30 மணியளவில் இவ்வழக்கின் எதிரியான மூர்த்தி என்பவர் எனது கணவர் இசக்கிமுத்து ரேடியோ செட்டில் வைத்திருந்த டியூப் லைட்டை உடைத்துள்ளார். அதை பார்த்த எனது அம்மா அ.சா.1 செல்வி எதிரி மூர்த்தியை சத்தம் போட்டார், எதிரி எனது அம்மாவை தேவடியா மவளே, புண்டாமவளே என்று ஆபாசமாக பேசி வெளியே வா என்று என் வீட்டிற்கு வந்து சத்தம் போட்டார். சத்தம் போடவும் எனது அம்மா வெளியே வந்தார் எதிரியை பார்த்து என் அம்மா ஏன் இவ்வாறு பேசுகிறாய் என்று கேட்டதற்கு எதிரி என் அம்மாவை அடித்து, கன்னத்தில் காயம் ஏற்படுத்தியும், மிதித்தும் காயப்படுத்தினார். எதிரி என் தாயாரின் நெஞ்சில் மிதித்ததில் அவர் கீழே விழுந்ததால் அவருக்கு பின் தலையில் வீக்கக்காயம் ஏற்பட்டது. அதில் என் அம்மா அ.சா.1 க்கு மூச்சுத்திணறலும் ஏற்பட்டது.

3. சம்பவத்தை பார்த்து அருகில் இருந்த முருகன் மற்றும் மாரியப்பன் ஆகியோர்கள் சத்தம் போட்டார்கள். அதனால் எதிரி உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று என் அம்மா அ.சா.1 ஐ மிரட்டி விட்டு சென்றுவிட்டார்.

4. பின்பு காயம்பட்ட என் அம்மா அ.சா.1 ஐ நாசரேத் லூக்கா மருத்துவமனைக்கு முருகன் மற்றும் மாரியப்பன் ஆகியோர்கள் அழைத்து சென்று, சிகிச்சையில் சேர்த்தனர். அங்கு அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்பு அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு கார் வாகனம் மூலமாக கொண்டு சேர்த்தோம். காயம்பட்ட என் அம்மா அ.சா.1 தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு 8 நாட்கள் சிகிச்சை பெற்று வந்தார். பின்பு 4 நாட்கள் கழித்து அங்கிருந்து வீட்டிற்கு வந்தோம். மீண்டும் என் அம்மா அ.சா.1 க்கு நெஞ்சு வலி ஏற்பட்டதால் திருநெல்வேலியில் உள்ள புதிய நவீன அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு அவருக்கு ஆஞ்சியோ பிளாஸ்டி சிகிச்சை செய்தார்கள். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

5. நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளதை தான் முதல்

DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2025.08.18 17:34:47 +0530

விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். அ.சா.1 என்னுடைய தாயார் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. எனது மகள் என்னிடம் எனது அம்மா அ.சா.1 ஐ அடித்து கீழே தள்ளிவிட்டதாக கூறியதால் நான் சென்று பார்த்தேன். இந்த வழக்கில் பட்டியல் சாட்சிகளாக சேர்க்கப்பட்டுள்ள அனைவரும் என்னுடைய உறவினர்கள் என்றால் சரிதான்.

6. என் அம்மா அ.சா.1 க்கு காயம் ஏற்பட்டவுடன் முதலில் நாசரேத் மருத்துவமனைக்கு தான் சென்றோமா என்றால் சரிதான். அதன்பிறகு அ.சா.1 என் அம்மாவிற்கு இருதயத்தில் பிரச்சனை இருந்தததால் அவரை மேல் சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோமா என்றால் சரியல்ல. இந்த சம்பவம் நடைபெறுவதற்கு முன்பு அ.சா.1 என் அம்மாவிற்கு சுகர் மட்டும் தான் இருந்தது. எதிரி அவர் நெஞ்சில் மிதித்ததில் ஏற்பட்ட மூச்சு திணறல் காரணமாக அவருக்கு இருதயத்தில் ஏற்பட்ட வலி காரணமாக மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு சென்றோம்.

7. என் தாயாருக்கு ஏற்கனவே ஆஞ்சியோ சிகிச்சை நடைபெற்றிருந்ததா என்றால் இந்த வழக்கு சம்பவத்திற்கு பின்பு எதிரி அவரின் நெஞ்சில் மிதித்தால் அவருக்கு வலி ஏற்பட்டது அதற்கு பிறகு தான் அவரை திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் ஆஞ்சியோ பிளாஸ்டி சிகிச்சைக்கு சேர்த்தோம். சம்பவம் நடந்தவுடன் நாங்கள் நாசரேத் காவல்நிலையத்திற்கு தகவல் கொடுத்தோமா என்றால் காவல்நிலையத்திற்கு செல்வதற்காக என் தாய் அ.சா.1 ஐ அழைத்து சென்றபோது அவர் மயங்கி விட்ட காரணத்தில் நாங்கள் உடனடியாக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம்.

8. மருத்துவமனைக்கு வந்த நாசரேத் போலீசார் வாக்குமூலத்தில் என் தாயார் படித்து பார்த்து கையொப்பம் செய்தாரா என்றால் விசாரணையின் போது அவர் மயக்க நிலையில் இருந்தார் பின்பு தான் அவர் அதை படித்தார். என் தாயார் அ.சா.1 வள்ளியூரில் அரசுப் பணியாளராக பணியாற்றினாரா என்றால் பணியாற்றினார். தற்போது அவர் ராதாபுரத்தில் பணியாற்றி வருகிறார்.

9. வழக்கு சம்பவத்திற்கு முன்பே ஒரு பிரச்சனை காரணமாக என் கணவர் 4 அல்லது 5 நபர்களிடம் சண்டை போட்டார்கள் அதன் பின்னிட்டு அந்த பிரச்சனை தொடர்ச்சியாக தான் இந்த வழக்கு சம்பவம் ஏற்பட்டதா என்றால் அதுகுறித்து எனக்கு தெரியவில்லை, ஆனால் சண்டை போட்டார்கள். அந்த சம்பவத்தில் சண்டை போட்ட நபர்கள் யார் யார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V — Digitally signed by DEVI RAKSHA M V Date: 2025.08.18 17:35:19 +0530

Judicial Magistrate, Sathankulam.